

சேலம் கிழக்கு மாவட்டம் வாழப்பாடியில் உள்ள தளபதி மு.க.ஸ்டாலின் அறிவாலயம் கலைஞர் அரங்கில் பொது உறுப்பினர்கள் கூட்டம் மாவட்ட அவைத்தலைவர் முரா. கருணாநிதி தலைமையில் நடைபெற்றது. இதில் கிழக்கு மாவட்ட செயலாளர் எஸ். ஆர்.சிவலிங்கம் எம்.பி., கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். இக்கூட்டத்தில் மாவட்ட துணை செயலாளர் சுரேஷ்குமார், மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ஏ.ஏ.ஆறுமுகம், தே.மலையரசன் எம்.பி., மாநில தகவல் தொழில் நுட்ப அணி துணை செயலாளர் டாக்டர் தருண், மனோகரன், கோபால் , சங்கர், சந்திரமோகன் , சோமசுந்தரம், ஒன்றிய செயலாளர்கள் மாணிக்கம், விஜயகுமார், ரத்தினவேல் , சக்கரவர்த்தி, மாதேஸ்வரன், மூர்த்தி, ராஜேந்திரன், மருதமுத்து, சிவராமன் , டாக்டர் செழியன், வரதராஜன், சித்தார்த்தன், பாலமுருகன், சாத்தப்பாடி மணி , நகர செயலாளர்கள் வேல்முருகன், பாலசுப்பிரமணியம், ராமச்சந்திரன், மற்றும் பேரூர் செயலாளர்கள் சார்பு அணி நிர்வாகிகள், கழக முன்னோடிகள், கழக நிர்வாகிகள் திரளாக கலந்து கொண்டனர். இக்கூட்டத்தில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன .




ஈரோடு தெற்கு மாவட்ட கழகம் சார்பில் கருங்கல்பாளையம், காந்தி சிலை முன்பு நீட் தேர்வில் நடைபெற்ற முறைகேடுகளை கண்டித்தும் நீட் தேர்வை முழுமையாக ரத்து செய்ய வலியுறுத்தியும் திராவிடர் கழகம் சண்முகம் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட கழக துணை செயலாளர்கள் ஆ.செந்தில்குமார், க.சின்னையன், மாவட்ட கழகப் பொருளாளர் ப.க.பழனிச்சாமி, மாநகர கழக செயலாளர் மு.சுப்ரமணியம், இரா.சேகரன், கே.சந்திரசேகர் பகுதி கழக செயலாளர்கள் எஸ்.குமாரவடிவேல், பொ.ராமசந்திரன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், மதசார்பற்ற கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள், தொண்டர்கள் பலர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு கண்டன முழக்கங்கள் எழுப்பினர்.

### புதுச்சேரி மாணவர்களுக்கு பிரெஞ்சு மொழி பாடத்திட்டம்

# தடையின்றி கிடைப்பதை அரசு உறுதி செய்ய வேண்டும்!

## முதல்வர் ரங்கசாமிக்கு - தி.மு.க. அமைப்பாளர் இரா. சிவா வலியுறுத்தல்!

புதுச்சேரி, மே 18-

புதுச்சேரி மாணவர்களுக்கு பிரெஞ்சு மொழி பாடத்திட்டம் தடையின்றி கிடைப்பதை உறுதி செய்ய உரிய உறுதியான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று புதுச்சேரி முதல்வர் ரங்கசாமியை மாநில தி.மு.க. அமைப்பாளர் இரா. சிவா வலியுறுத்தி உள்ளார்.



இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்தி அறிக்கையில் கூறியிருப்பதாவது: -

ஒன்றிய கல்வி அமைச்சகத்தின் கீழ் இயங்கும் ஒன்றிய இடைநிலைக் கல்வி வாரியம் (CBSE) 15.05.2026 அன்று வெளியிட்டுள்ள புதிய மொழிப்பாடக் கொள்கை (Circular No: Acad 33/2026) கடுமையான கண்டனங்களுக்கு பின்பும் எவ்வித மாற்றமும் செய்யாத ஒன்றிய அரசின் நடவடிக்கைகளை கண்டு பேரதிர்ச்சியாக உள்ளது. “மாணவர்களின் அழுத்தத்தைக் குறைக்கிறோம்” என்ற போர்வையில், நேரடியாகவும், மறைமுகமாகவும் இந்தி மற்றும் சமஸ்கிருத மொழிகளைத் திணிக்கும் உள்நோக்கத்தோடு இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது அப்பட்டமாகத் தெரிகிறது.

இந்த மக்கள் விரோத, மாணவர் விரோத அறிவிப்பை எதிர்த்து பின்வரும் முக்கியக் காரணங்களின் அடிப்படையில் கண்டனத்தைப் பதிவு செய்கி றோம்.

புதுச்சேரியின் வரலாற்றுச் சிறப்புமிக்க கலாச்சார அடையாளமாகவும், பல்லாயிரக்கணக்கான மாணவர்களின் முதன்மைத் தேர்வாகவும் இருக்கும் பிரெஞ்சு மொழியை, இந்தியாவில் உள்ளூர் மொழியாக (Native Language) அங்கீகரிக்க வேண்டும்.

மாணவர்கள் தங்களுக்கு விருப்பமான பிரெஞ்சு மொழியை எவ்விதத் தடையுமின்றி ‘இரண்டாம் மொழியாகத்’ தேர்ந்தெடுத்துப் படிக்கும் முழு உரிமை நிலைநாட்டப்பட வேண்டும். பிரெஞ்சு மொழியைப் படிக்க விரும்பும் மாணவர்கள், அதை 3வது அல்லது 4வது மொழியாகத்தான் படிக்க வேண்டும் என்ற தற்போதைய புதிய விதிமுறை முற்றிலும் தேவையற்றது. ஒரு சர்வதேச மொழியைக் கூடுதல் சுமையாக மாற்ற நினைக்கும் சிபிஎஸ்இயின் இந்த தன்னிச்சையான போக்கை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

9ஆம் வகுப்பு மாணவர்களுக்குப் புதிய மொழிப் பாடத்திட்டத்தைக் கட்டாயமாக்கும் சிபிஎஸ்இ, அதற்கான முறையான பாடப்புத்தகங்களைக் கூட இன்னும் தயாரிக்கவில்லை. 9ஆம் வகுப்பு மாணவர்களை 6ஆம் வகுப்புப் புத்தகங்களைப் படிக்கச் சொல்வது வேடிக்கையானது. பாடப் புத்தகங்கள் ஏதுமின்றி மாணவர்களையும், பெற்றோர்களையும், பள்ளிகளையும், ஆசிரியர்களையும் மன உளைச்சலுக்கு ஆளாக்கி அலைக்கழிக்கும் சிபிஎஸ்இ யின் நிர்வாகச் சீர்கேடு கண்டனத்திற்குரியது.

“மாணவர்களுக்கான கற்றல் அறிவு மட்டுமே முக்கியம்” என்று மேடைகளில் பேசிவிட்டு, நடைமுறையில் ‘இரண்டு இந்திய மொழிகள் கட்டாயம்’ என்ற விதியின் மூலம் சமஸ்கிருதம் மற்றும் இந்தி மொழிகளை மாணவர்கள் மீது மறைமுகமாகத் திணிக்கும் வேலையை ஒன்றிய அரசும் சிபிஎஸ்இயும் உடனடியாகக் கைவிட வேண்டும்.

பிரெஞ்சு மொழியோடு பிரிக்க முடியாத வரலாற்றுத் தொடர்புடைய புதுச்சேரி மண்ணில், அம்மாநில மாணவர்களின் மொழி உரிமை பறிக்கப்படும் போது, புதுச்சேரி அரசு மெத்தனப் போக்குடன் அமைதி காப்பது வேதனையளிக்கிறது.

புதுச்சேரி முதல்வர் அவர்கள் ‘போர்க்கால அடிப்படையில்’ இந்த விவகாரத்தில் உடனடியாகத் தலையிட்டு, புதுச்சேரி மாணவர்களுக்கு பிரெஞ்சு மொழி பாடத்திட்டம் தடையின்றி கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும். இனிவரும் காலங்களில், எந்தவொரு ஒன்றிய அமைப்போ அல்லது ஒன்றிய அரசோ புதுச்சேரி மண்ணில் இருந்து பிரெஞ்சு மொழியை நீக்க முனையாதவாறு, அதற்கான நிரந்தர சட்டப்பூர்வப் பாதுகாப்பையும், சிறப்பு விலக்கை யும் புதுச்சேரி அரசு மத்திய அரசிடமிருந்து பெற்றுத் தர வேண்டும்.

ஒன்றிய அரசின் உத்தரவுக்கு அடிபணிந்து வழக்கம்போல் முதல்வர் அவர்கள் தலையாட்டி பொம்மையாக அமைதியாக இருந்தால், மாணவர்களின் கல்வி உரிமையையும், புதுச்சேரி யின் மொழி அடையாளத்தையும் சிதைக்கப் பார்க்கும் ஒன்றிய அரசு, சிபிஎஸ்இ மற்றும் இதற்குத் துணைபோகும் புதுச்சேரி அரசின் செயல்பாடுகளை எதிர்த்து, அனைத்துத் தரப்பு மக்களையும் திரட்டித் தொடர் போராட்டங்கள் முன்னெடுக்கப்படும் என எச்சரிக்கிறேன்.

இவ்வாறு அறக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

### தஞ்சை வரும் கழகத் தலைவருக்கு

# திருவாரூர் மாவட்டக் கழகத்தினர் சிறப்பான வரவேற்பு!

திருவாரூர், மே.18-

திருவாரூர் மாவட்ட கழக முன்னாள் செயலாளர் மறைந்த பூண்டி கலைச்செல்வன் அவர்களின் இல்ல திருமண விழாவிற்கு வருகை தரும் கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கும், கழக இளைஞர் அணியின் செயலாளர் சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும், தலைமை கழக நிர்வாகி களுக்கும் திருவாரூர் மற்றும் தஞ்சாவூர் மாவட்ட கழகத்தின் சார்பில் தஞ்சாவூரில் சிறப்பான வரவேற்பு அளிக்கப் பட உள்ளது.

கழக தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் “மீண்டு வருவோம் மீண்டும் வருவோம்” என்கிற சூளுரையோடு சட்டமன்ற தேர்தலுக்குப்பின், முதன்முறையாக தஞ்சை மாநகருக்கு, திருவாரூர் மாவட்ட செயலாளர் பூண்டி.கே. கலைவாணன் எம்.எல்.ஏ அவர்களுடைய சகோதரரும் கொரடாச்சேரி பேரூர் கழகத்தினுடைய செயலாளர் பூண்டி.கே. கலைவேந்தன் அவர்களுடைய தந்தையாரும், கழக செயல் மறவருமான மறைந்த பூண்டி கே. கலைச்செல்வம் அவர்களுடைய மகள் கலை அழகிராம் பாலாஜியோடு கரம் கோர்க்கும் திருமண நிகழ்வுக்கு தலைமை ஏற்க வருகை தரவுள்ளார்கள்.

இன்று (18.05.2026 - திங்கள்) காலை 9.00 மணிக்கு, திராவிட நாயகர் கழக தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களுடைய சீரிய தலைமையில் தஞ்சாவூர் மகாராஜா மஹாலில் நடைபெற உள்ள இந்த திருமண விழாவிற்கு கழக இளைஞர் அணி செயலாளர் , சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களும், பொதுச் செயலாளர் துரைமுருகன், கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு, முதன்மை செயலாளர் கே.என். நேரு, கழக துணை பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்பி. மற்றும் தலைமைக் கழக நிர்வாகி கள் முன்னிலை ஏற்க இருக்கின்றனர்.

திருமண விழாவில் பங்கேற்க வருகை தரும் கழகத் தலைவர் திராவிட நாயகர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களுக்கும், கழகத்தினுடைய இளைஞர் அணி செயலாளர் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும், தலைமை கழக நிர்வாகி களுக்கும் திருவாரூர், தஞ்சாவூர், உள்ளிட்ட மாவட்டங்களைச் சேர்ந்த மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகளும் கழகத் தோழர்களும் திரண்டு வந்து மாபெரும் வரவேற்பு அளிக்கின்றனர்.

### திருப்பூர் கிழக்கு – திருப்பூர் மத்திய – திருப்பூர் தெற்கு

# திருப்பூர் வடக்கு - நீலகிரி மாவட்ட கழக நிர்வாகிகளுடன் கள ஆய்வு!

## ஆய்வாளர்கள் ப.தாயகம் கவி – என்.மருது கணேஷ் அறிக்கை!

கோவை, மே. 18–

திருப்பூர் கிழக்கு, திருப்பூர் மத்தியம், திருப்பூர் தெற்கு, திருப்பூர் வடக்கு, நீலகிரி மாவட்ட கழக நிர்வாகிகள் இடையே கள ஆய்வு பணி நடைபெறும் தேதிகள் வழிகாட்டு முறைகள்

மாவட்ட செயலாளர்களின் பார்வைக்கு....

கள ஆய்வாளர்கள் கழக துணை அமைப்புச் செயலாளர் ப.தாயகம் கவி

கழக சட்டத்துறை துணை செயலாளர் என்.மருது கணேஷ் அறிவிப்பு வருமாறு:–

கடந்த. 14.05.2026 அன்று நடைபெற்ற மாவட்ட கழக செயலாளர்கள் கூட்டத்தில் மதிப்பிற்குரிய கழகத் தலைவர் அவர்கள் அறிவித்த படி, ஒவ்வொரு சட்டமன்ற தொகுதியிலும் கள ஆய்வு செய்திட அமைக்கப்பட்ட குழுக்களின் ஆலோசனை கூட்டம் கழகத் தலைவர் அவர்கள் தலைமையில் அண்ணா அறிவாலயத்தில் உள்ள கலைஞர் அரங்கில் 16.05.2026 அன்று காலை நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கழகத் தலைவர் அவர்கள் கள ஆய்வுக் குழுவுக்கு அளித்திட்ட வழிகாட்டு முறைகளின் படி, கீழ்க்கண்ட அட்டவணைப்படி சட்டமன்றத் தொகுதிகள் தோறும் கள ஆய்வுப் பணி நடைபெற உள்ளது.

இப்பணியில் மதிப்பிற்குரிய அந்தந்த மாவட்ட செயலாளர்கள் கீழே குறிப்பிட்டுள்ள அட்டவணை படியும் மற்றும் வழிகாட்டு முறைகளின் படியும் கள ஆய்வுப்பணி கழகத் தலைவர் அவர்களின் எண்ணத்திற்கு ஏற்ப நிறைவாக நடைபெற ஏற்பாடு செய்யும் படி கேட்டுக் கொள்கிறோம்.

கள ஆய்வு நடைபெறும் சட்டமன்றத் தொகுதிகள் மற்றும் தேதி – நேரங்கள்

**திருப்பூர் வடக்கு மாவட்டம்**

1. 18.05.2026 , காலை 9.30, மற்றும் மாலை 4–மணி அவினாசி சட்டமன்ற தொகுதி
2. 19.05.2026 , காலை 9.30 , மற்றும் மாலை 4–மணி திருப்பூர் வடக்கு சட்டமன்றத் தொகுதி

திருப்பூர் தெற்கு மாவட்டம்

3. 20.05.2026, காலை 9.30 மணி,மற்றும் மாலை 4–மணி மடத்துக்குளம் சட்டமன்ற தொகுதி.
4. 23.05.2026, காலை 9.30 மணி,மற்றும் மாலை 4–மணி உடுமலைப்பேட்டை சட்டமன்ற தொகுதி

திருப்பூர் மத்திய மாவட்டம்

5. 24.05.2026, காலை 9.30 மணி,மற்றும் மாலை 4–மணி பல்லடம் சட்டமன்ற தொகுதி.
6. 25.05.2026, காலை 9.30 மணி,மற்றும் மாலை 4–மணி திருப்பூர் சட்டமன்ற தொகுதி.

**திருப்பூர் கிழக்கு மாவட்டம்**

7. 26.05.2026, காலை 9.30 மணி,மற்றும் மாலை 4–மணி காங்கேயம் சட்டமன்ற தொகுதி.
8. 27.05.2026, காலை 9.30 மணி,மற்றும் மாலை 4–மணி தாராபுரம் சட்டமன்ற தொகுதி.

**நீலகிரி மாவட்டம்**

9. 28.05.2026, காலை 9.30 மணி,மற்றும் மாலை 4–மணி கூடலூர் சட்டமன்ற தொகுதி
10. 29.05.2026, காலை 9.30 மணி, மற்றும் மாலை 4–மணி ஊட்டி சட்டமன்ற தொகுதி
11. 30.05.2026, காலை 9.30 மணி,மற்றும் மாலை 4–மணி குன்னூர் சட்டமன்ற தொகுதி

அன்பிற்குரிய மாவட்ட செயலாளர்கள் , கழகத் தலைவர் அவர்களின் கீழ்க்கண்ட அறிவுறுத்தல் படி களஆய்வுக் கூட்டத்தினை சிறப்பாக நடத்தித் தரும்படி கேட்டுக்கொள்கிறோம்.

1. மேற்குறிப்பிட்ட தேதி களில் அந்தந்த சட்டமன்ற தொகுதிகளுக்கு உட்பட்ட இடங்களில் கள ஆய்வு கூட்டங்களை ஏற்பாடு செய்ய வேண்டும்.

2. காலையில் அந்தந்த சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட, தாய்கழக நிர்வாகிகள்,

(மாவட்டச் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், தலைமை செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், இந்நாள், முன்னாள் சட்டமன்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள், 2026–ல் போட்டியிட்ட கழக வேட்பாளர்கள், தேர்தல் பார்வையாளர்கள், ஒன்றிய, நகர, பேரூர் , பகுதி செயலாளர்கள், மற்றும் நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கிளை செயலாளர்கள், வார்டு செயலாளர்கள் ஆகியோர் பங்கேற்க வேண்டும். குறிப்பாக தற்பொழுது பொறுப்பில் இல்லாத முன்னாள் மூத்த நிர்வாகிகளையும் கூட்டத்திற்கு கண்டிப்பாக அழைக்க வேண்டும்.

3. மாலை 4– மணிக்கு சார்பு அணிகளின் மாநில மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் பகுதி நிர்வாகிகள் பங்கேற்க வேண்டும்.

4. கூட்டத்தில் கைபேசி கட்டாயம் அனுமதி இல்லை.

5. கூட்டத்தில் தங்களது கருத்துக்களை கூற வரும் நிர்வாகிகள் மனுவாகவும் தரலாம் , அதே நேரத்தில் அந்த கருத்துக்களை சுருக்கமாக நேரிலும் தெரிவிக்க வேண்டும்.

6. ஒவ்வொரு சட்டமன்ற தொகுதியில் நடைபெறும் கள ஆய்வு கூட்ட நிகழ்ச்சியை மேற்குறிப்பிட்ட அனைத்து நிர்வாகிகளுக்கும், கண்டிப்பாக தகவல் தெரிவிக்க வேண்டும்,

7. கூட்டம் நடைபெறும் அரங்கம், உள்ளேயே நிர்வாகிகளை தனியாக சந்திப்பதற்கு தனி அறைகள் உள்ளதாக ஏற்பாடு செய்ய வேண்டும்.

8. கூட்டத்தின் தொடக்கத்தில் அந்த சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட நிர்வாகிகள் பெயர்கள் அடங்கிய வருகை பதிவேட்டினை நுழைவு வாயிலேயே வைத்து நிர்வாகிகளிடம் கையொப்பம் பெற வேண்டும்.

இவ்வாறு கழக துணை அமைப்புச் செயலாளர் ப.தாயகம் கவி, கழக சட்டத் துறை துணை செயலாளர் என்.மருது கணேஷ் ஆகியோர் தங்களது அறிக்கையில் தெரிவித்துள்ளார்கள்.

# கும்மிடிப்பூண்டியில் தண்ணீர் பந்தல்!

## டி.ஜெ.கோவிந்தராஜன் திறந்து வைத்தார்!

கும்மிடிப்பூண்டி. மே.18–

கும்மிடிப்பூண்டி தொகுதி, கவரைப்பேட்டையில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர், தலைமை செயற்குழு உறுப்பினருமான டி.ஜெ.கோவிந்தராஜன் தண்ணீர் பந்தல் திறந்து வைத்தார். உடன் மு.மணிபாலன், எஸ். ரமேஷ், இரா.அறிவழகன், மு.பாஸ்கரன், எம்.ஆர்.ஸ்ரீதர், எஸ்.கோபி, மு.கேசவன், டி. ஜெ.தமிழரசன், எஸ்.ராமஜெயம், க.பரத்குமார், கே.இ.திருமலை, கே.ஜி.நமச்சிவாயம், புருஷோத்தமன், இ.பிரபு, மு.வேதச்சாலம், எஸ். உதயகுமார், எம்.அருள், பா. பரத்குமார், எஸ்.எம். திருநாவுக்கரசு, டி.மஸ்தான், கே.வி.நாகராஜ், எம்.ஜெயச்நதிரன், கே.எஸ்.சதீஷ்குமார், டி.கே.ராஜா, ப.சுரேஷ், டி.லட்சுமி நாராயணன், ப.அறிவழகன், நரேந்திரன், மோ.பிரசாத், யுகேந்தர், கௌதம், பாத்தபாளையம்.முரளி, மெய்யழகன், பா.அனந்தராஜ், ஏசு, செங்கரை பெருமாள், முரளி, பாலுமகேந்திரன், குமார், அராப்பு.பாபு, சீனிவாசன், உதயகாந்தம்மாள், கே.என்.பழனி, மாரி, அருன்மொழி, சிவா, விக்கி, இ.எம். ராஜேஷ், பாலா, கஜேந்திரன், பிரபா, முத்து, எஸ்.செந்தில், கே.வி.ரவி, ஜெ.என்.எஸ். பாண்டியன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.


திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**இர. செங்குட்டுவன்**

**மே 18 (2021)**



இளமைப் பருவத்திலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு பணியாற்ற தொடங்கியவர்.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் கிளைச் செயலாளராகவும், சித்தாமூர் ஒன்றிய பொறுப்பாளராகவும், மாவட்ட கலை,இலக்கிய பகுத்தறிவு பேரவை துணை அமைப்பாளராகவும் பொறுப்பு வகித்தவர்.

கொளத்தூர் ஊராட்சி மன்றத் தலைவராகவும், சித்தாமூர் ஒன்றியக்குழு உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

இந்தி திணிப்பு எதிர்ப்பு போராட்டம், ஈழத்தமிழர் ஆதரவு போராட்டம் என பல்வேறு போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.


தலைமைக் கழகம்
தி.மு.க.



திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**ஏ. கோவிந்தசாமி**

**மே 18 (1969)**



மொழிப்போராட்டத்தில் கலந்து கொண்டு சிறை சென்றவர். 1952ல் தி.மு.க. ஆதரவோடு போட்டியிட்டு விக்கிரவாண்டி தொகுதி சட்டமன்ற உறுப்பினரானார்.

கழகம் நடத்திய மும்முனைப் போராட்டத்தில் முன்னணித் தலைவர்கள் அனைவரும் கைதாகி சிறை சென்றபோது, அண்ணா அவர்களால் கழக பொறுப்பாளராக நியமனம் செய்யப்பட்டவர்.

தி.மு.க. தொழிற்சங்கச் செயலாளராகப் பணியாற்றியவர்.

அண்ணா அவர்களின் நம்பிக்கைக்கு உரியவரானார். தலைவர் கலைஞரின் உற்ற நண்பராக விளங்கியவர்.

1967ல் அண்ணா அமைச்சரவையிலும், அண்ணா மறைவுக்குப் பிறகு தலைவர் கலைஞர் அமைச்சரவையிலும் பணியாற்றியவர்.

“கொள்கை குன்றம் கோவிந்தசாமி” என தலைவர் கலைஞர் அவர்களால் பாராட்டப்பட்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.